# சிதம்பர ரகசியம்



Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90
22770
(3803)

ஸ்ரீமத் ஸ்வயம்ப்ரகாசப் பிரம்மேந்திர
ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளியது.

விசாக விஜயம்
26, சுபத்திராள் தெரு
திருவல்லிக்கேணி
விலை அணா 2.

# பத்திரிகையின் அபிப்பிராயங்கள்

'......ஸ்வாமிகளுக்கு உலகத்தாரால் நேர்ந்த துன்பங்களும் அவற்றை மிக அலக்ஷியமாய் ஸ்வாமிகள் ஏற்று ஞான வீரராக நின்ற நிலையும் படிக்கப்படிக்க உருக்கத்தை உண்டாக்குகின்றன. ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் ஸநாதன தர்மத்தின் பெருமையையும், ஆலய தத்துவங்களையும், மூர்த்தி பேதங்களின் ரஹஸ்யங்களையும், சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்திர உண்மைகளையும், விரதங்களின் உட்கிடக்கைகளையும், பக்தியின் சிறப்பையும், நல்லொழுக்கத்தின் வகையையும், ஞானத்தின் பெருமையையும், பிறவற்றையும் விளக்குகின்றன. இனிய எளிய நடையில் தக்க உவமானங்கள், உதாரணங்கள் முதலியவற்றோடு ஸ்வாமிகள் அருளியிருக்கின்றார்கள்......இது தமிழ் நாட்டாருக்கு ஆத்மானந்தத்தை அடைவதற்குரிய வழியைக் காட்டும் அருந்துணை யென்பதில் ஐயமில்லை. நல்ல முறையில் உயர்ந்த காகிதத்தில் இப்புத்தகம் அச்சிடப் பெற்றிருக்கிறது.'

—சுதேசமித்திரன்.

'......ஸ்வாமிகளுடைய அரிய வரலாற்றை எளிய நடையில் ஸ்ரீ. வரகவி - திரு. அ. சுப்பிரமணிய பாரதியாரவர்கள் எழுதியிருக்கின்றார். ஸ்வாமிகளுடைய பெருமையை இது நன்றாக வெளிப்படுத்துகிறது. தென்னாட்டிலுள்ள மகான்களைப் பற்றிய சரித்திரங்கள் மிக அருமையாகவே வெளிவருகின்றன. தமிழ் நாட்டார் இந்தச் சரித்திரத்தைப் படித்துப் பாராட்டுவார்களென்பதில் ஐயமில்லை......'

—சுதந்திரச் சங்கு.

ஸ்ரீ. வை. ஜகந்நாதன்.

உ

ஸ்ரீ குருப்யோநம:

3805

# முகவுரை

சேலம் ஜில்லாவைச் சேர்ந்த சேந்தமங்கலத்தில் உள்ள தத்தகிரி குகாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் ஸ்வயம்பிரகாச ப்ரம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள் பல வருஷங்களுக்கு முன் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தம்மைத் தரிசனம் செய்யவரும் பக்தகோடிகள்கேட்டு உய்யும்பொருட்டு ஒவ்வோர் உபந்யாசம் எழுதிப் படிக்கச் செய்தார்கள். அவ் வுபந்யாசங்களுள் சிதம்பர க்ஷேத்திர ஸம்பந்தமான நான்கு உபந்யாஸங்கள் இப்புஸ்தகத்தில் அடங்கியிருக்கின்றன. ஆகமம், புராணம், வேதம், தமிழ் நூல்கள் முதலியவற்றிலுள்ள பல அருமையான விஷயங்களும் அரிய தத்துவங்களும் இவற்றிற் காணப்படும். ஸ்வாமிகளுடைய திவ்ய சரித்திரமும் உபதேசங்களும் அடங்கிய 'ஸ்வயம் ப்ரகாச விஜயம்' என்னும் புஸ்தகத்தில் இவற்றைப் போன்ற 33 உபந்யாஸங்கள் உள்ளன. ஆஸ்திக சிரோமணிகள் இந்தப் புஸ்தகங்களை வாங்கிப் படித்து இன்புறுவார்களென்று நம்புகின்றோம். இந்தப் புஸ்தகங்களால் உண்டாகும் ஊதியமனைத்தும், தத்தகிரியில் ஸ்ரீமத் ஸ்வாமிகள் பிரதிஷ்டை செய்வித்திருக்கும் ஸ்ரீ தத்தாத்ரேய கைங்கர்யத்திற்குச் சேரும்.

இங்ஙனம்,
விசாக விஜய அன்பர்கள்.

Dr. U. V. S. IYER LIBRARY
22770
MADRAS-90

# ஸ்வயம் ப்ரகாச விஜயம்

## மகா ஞானியின் சரித்திரம்

---

அவருடைய திவ்ய ஞாநாமிர்த உபதேச உண்மைகள்

அடங்கிய

அருமையான புஸ்தகம்

---

இதில் அடங்கிய விஷயங்கள்

1. ஸ்வாமிகளின் அவதாரம்
2. இளமைப் பருவம்
3. வித்யாப்யாசம்
4. உத்யோகமும் துறவில் விருப்பமும
5. குருவின் உபதேசம்
6. துறவு பூணல்
7. புகழுரை
8. சேந்தமங்கலம் அடைதல்
9. குகாலயம் புகுதல்
10. ப்ரஹ்மானந்த நிஷ்டைகள்
11. விநோதத் திருவிளையாடல்
12. ஸ்வாமிகள் மீண்டும் சேந்தமங்கலம் அடைதல்
13. தத்தாத்ரேயப் பிரதிஷ்டை
14. தத்தகிரியின் மகிமை
15. விபூதிப் பிரஸாத மகிமை
16. ஸ்வாமிகளின் பாத பூஜை வைபவம்

இவற்றையன்றி ஸ்வாமிகளின் 33 உபந்யாஸங்களும் 120 கேள்விகளும் விடைகளும் அடங்கிய ப்ரச்னோத்தர மாலிகாவும், ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்திர ஸாஸ்வதி சரித்திரமும், ஸ்ரீ பகவத்கீதாஸாரமும் இப் புஸ்தகத்தில் உள்ளன. 18 ஆப்டோன் படங்கள் இப் புஸ்தகத்திற் சேர்க்கப்பட்டுள்ளன.

விலை ரூ. **2—8—0**

**கிடைக்குமிடம்:—**

விசாக விஜயம்

26, சுபத்ராள் தெரு

**திருவல்லிக்கேணி.**

# 1. சிதம்பர ரகசியம்

இப்பெரிய பூமண்டலத்துள்ளே, எல்லாவிதத்தாலும் மிகச் சிறப்புற்றோங்கி விளங்கும் நம் பாரதகண்டத்தில் அநேக சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும், வேறு பல தேவர் ஆலயங்களும் இருக்கின்றன. அவைகள் அனைத்திலுங் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தூபி, விமானம், பிராகாரம், கோபுரமென்னும் இவைகள் ஒரு தன்மையாகவே காணப்படுகின்றன. இவையன்றி ஒவ்வோர் ஆலயத்திலும் அவ்வவ்வாலயத்தின் பிரதான தேவதா பீடம் கர்ப்பக் கிருகத்திலேயே இருக்கிறது. இங்ஙனம் ஒன்று போல் எல்லா ஆலயங்களும் கட்டப்படுவதற்குச் சில முக்கிய காரணங்கள் உள்ளன. இங்கே சிலவற்றை விளக்கிக் காட்டுவாம்:

## ஆலயங்களின் வகை

உலகத்திலுள்ள மாந்தர் அனைவரும் உண்மைக்காக அகப்பொருளை அறிந்து உய்யும் ஆற்றல் பெற்றிலராதலால், யாவருக்கும் தத்தம் சரீர இயல்பு ஆலயங்களில் வெளிநோக்காகக் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாலயங்கள் ஹ்ருதய கமலப்பிரஸ்தாரம் (ஹ்ருதய கமலத்தை விரித்துக்குறிப்பது) எனவும் சரீரப் பிரஸ்தாரம் (சரீரத்தை விரித்துக் குறிப்பது) எனவும் இருவகைப்படுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. இவற்றுள், ஹ்ருதயகமலப் பிரஸ்தாரத்தாற் சிதம்பர முதலிய சிவஸ்தலங்களும் சரீரப்பிரஸ்தாரத்தால் வேறு பல ஸ்தலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதருள்ளத்தே சொல்லாயும் பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வொரு வஸ்துவும் ஹ்ருதய கமலப் பிரஸ்தார ஆலயங்களாற் காட்டப்படும்.

யோகிகள் அறியவேண்டிய எழுவகைத் தாதுக்களின் நிலைமை சரீரப்பிரஸ்தார ஆலயங்களாற் குறிப்பித்துக் காட்டப்படும்.

## பிராகாரங்கள்

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்து ஒவ்வோரெழுத்தின் பொருளென ஆகமங்களில் ஒவ்வோரிடத்தில் குறிக்கப்பட்ட அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் பஞ்சகோசங்கள் சிவாலயங்களிலே ஐந்துபிராகாரங்களாக வுள்ளன. பிரணவமொழிந்த ஸ்ரீ அஷ்டாக்ஷரப்பொருளெனப் பாஞ்சராத்திரத்தின் ஓரிடத்திற் கூறப்படுஞ் சரீரத்திலடங்கிய சர்மம், மாமிசம், இரத்தம், மேதை, நரம்பு, எலும்பு, சுக்கிலம் என்னும் சப்ததாதுக்கள் விஷ்ணுவாலயங்களிலே எழு பிராகாரங்களாய் இருக்கின்றன. பிரணவத்தைக் கூட்டினால் சிவமந்திரம் ஆறெழுத்தும், நாராயண மந்திரம் எட்டெழுத்துமாகும்.

சிலவிடங்களிலே ஆலயம்கட்டுவதற்கு இடம், பொருள் குறைவுபடின், அங்கு ஸ்தூலஸூக்ஷ்மகாரண சரீரங்களைக் குறிக்கும் மூன்று பிராகாரங்களேனும், அனைத்திற்கும் பொதுவாக ஒரு பிராகாரமேனும் அமைப்பதுண்டு.

ஒவ்வொரு சரீரத்திலும் யோகிகள் அறியவேண்டிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறுதாரங்கள் இங்கே முறையே கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபமெனக் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கர்ப்பக் கிருகத்திலும் கமலமுகைபோன்ற விமானம் ஒன்றிருக்கும். அதன் உட்புறத்திற்குள் கடவுளுடைய திருவுருவம் அமைக்கப்படும்.

இனி, ஹ்ருதயகமலப் பிரஸ்தார ஆலயங்களிலே ஹ்ருதயத்திலுள்ள விஷயங்கள் விரித்துக் குறிக்கப்படுமென்று முன்னே கூறியதற்குச் சிதம்பராலயத்தையே திருஷ்டாந்தமாக எடுத்து நிரூபிப்பாம்.

## சிதம்பரம் ஹ்ருதயகமலம்

இச்சிதம்பர க்ஷேத்திர மகிமை புராணங்களிலே மாத்திரம் புகழப்படுவதன்று; வேதத்திலும் தர்சனோபநிஷத்திலே, "சிதம்பரம் ஹ்ருதய மத்தியிலுள்ளது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் இது விராட் புருஷனுடைய ஹ்ருதயஸ்தானமென்பது துணிபாம். அதுபற்றியே புராணங்கள், "இவ்வாலயங் கட்டும்பொழுது யோக முதல்வராகிய ஸ்ரீபதஞ்சலி முனிவர் சிதம்பரரகசியம் அறிந்து அதை விஸ்வகர்மாவுக்கு அனுக்கிரஹிக்க அவன் அவராணையைச் சிரமேற்கொண்டு ஆலயஞ் சமைத்தனன்" என்று கூறுகின்றன. ஒரு மஹா யோகியின் சரீரத்தை வடக்கே தலையும் தெற்கே பாதமுமாக வைத்து நோக்கினால் அந்நிலையும் இவ்வாலய அமைப்பும் ஒத்திருக்கும்.

## சிதம்பர ஆலயத்தின் உண்மை

இவ்வாலயத்துள்ளே ஆயிரக்கால் மண்டபம் தலையின் புறத்திருக்கும் ஆயிர இதழுள்ள கமலமென்னப்படும் மூளையைக் குறிக்கும். சிவகங்கை அம்மூளையின் மேற்புறத்துள்ள சந்திர புஷ்கரிணியெனப்படும் அமிர்தவாபியைக் குறிக்கும். ஜாக்ராவஸ்தையிலே ஆத்மா (ஜீவன்)வினுடைய அறிவு மூளையிலே விளங்குவது இயல்பாதலால், தேவமானத்திலே விடியற்காலமும் பிரதோஷகாலமுமாகிய மார்கழி ஆனி மாசங்களிலே ஆயிரக்கால் மண்டபத்தில் ஆநந்த நடராஜ

மூர்த்திக்கு மஹாபிஷேகம் நடந்து வருகின்றது. இவற்றின் தென்புறத்திலே ஸ்ரீ குருமூர்த்தியும், ஜ்யோதிர் லிங்கமும் எழுந்தருளியிருக்குமிடம் விசுத்தி ஸ்தான மாகப் பாவிக்கப்படும். அதற்குத் தெற்கே 'திருச்சிற்றம் பலம்' என்னும் மகாசபை இருக்கிறது. அங்கே பிரம்ம விஷ்ணு ருத்ர மகேசுவர ஸதாசிவர்களுக்கென ஐந்து பீடங்கள் இருக்கின்றன. ஸ்ரீ பஞ்சாக்ஷர எழுத்துக்கள் ஐந்தும் ஐந்து படிகளாக இருக்கின்றன. அவ்விடத்துள்ள கதவு அவித்தை அல்லது ஆவரணமெனப்படும். தத்துவங் களாகிய தொண்ணூற்றாறும் தொண்ணூற்றாறு பல்கணி களாயிருக்கின்றன. நடுவிலிருக்கும் நான்கு பொற்கம்பங்கள் நான்கு வேதங்களும், சுற்றியுள்ள இருபத்தெட்டு மரக்கம் பங்கள் இருபத்தெட்டு ஆகமங்களும் ஆம். இவைகளுள்ளே அடங்கிய இடம் சுத்தவித்தையெனவும், இரகசியம் முதலாக ஸ்ரீநடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்குமிடம் வரையிலுள்ள பீடம் பிரணவபீடமெனவும் சொல்லப்படும். அப்பிரணவ பீடத்தின் கண்ணே சகளத் திருமேனியையுடைய ஸ்ரீ ஆநந்த நடராஜமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றார். அதன் பின்னே ஆரண ஆகமங்களும் அறிந்தோத அரியதும், குறைவரம்பு கடந்ததும், 'திருச்சிற்றம்பலம்' என உயர்ந்தோராற் புகழ்ந்து போற்றப்படுவதுமாகிய அழியாப் பரஞ்சுடர்ச் சிவ வொளிச் சிதாகாச வடிவம் விளங்காநிற்கும். இச்சிதாகாச வடிவினையே ஊனக் கண்ணுற் கண்டோர் இரகசியமென்பர்.

கர்ப்பக்கிருகமான இவ்விடத்தே, அகிலலோக மாதா வாகிய சிவகாமசுந்தரி யென்னும் பராசக்தியோடு ஸ்தூல நடராஜ மூர்த்தியும், ரத்தின மயமான சூக்ஷ்ம நடராஜ மூர்த்தியும், சூக்ஷ்மதரமான மற்ருேர் இலிங்கமும் உண்டு.

இரகசியத்தை நிஷ்களமென்றும், வ்யக்தாவ்யக்த லிங்கத்தைச் சகள நிஷ்களமென்றும், ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தியைச் சகள வடிவமென்றும் உரைப்பர்.

இன்னும் கீழ்ப்புறத்திலே சண்டேசுவர ஸ்தானத்தில் பிரம்மதேவரும், தென்புறத்தில்விஷ்ணுமூர்த்தியும், வடபுறத்திற் பைரவமூர்த்தியென்னும் ஸம்ஹாரருத்திரரும்இருக்கின்றார்கள். விமானத்தின் மேலேயுள்ள ஒன்பது கும்பங்களும் வாமை முதலிய நவசக்திகளாம். அவ்விமானத்திலுள்ள கைமரங்கள் 64 கலைகளையும், செப்பேடுகள் 21600-ம் மனிதனால் ஒவ்வொரு தினமும் விடப்படுகின்ற சுவாசங்களையும், ஆணிகள் எழுபத்தீராயிரமும் அச்சுவாச சஞ்சார ஆதாரமான 72000 நாடிகளையும் குறிக்கின்றன.

இச்சபையின் தென்புறத்தேயுள்ள கனகசபை முற்கூறிய சபையின் அனேக பாகங்களைப் பெற்றுப் பதினெண் புராணங்களைப் பதினெண் கம்பங்களாய்ப் பெற்று மணிபூரகஸ்தானமாய் விளங்குகின்றது. இங்குள்ள சபைகள் ஐந்தும் ஐவகைக்கோசங்களை உணர்த்துகின்றன. ராஜசபை (ஆயிரக்கால் மண்டபம்) அன்னமய கோசமும், தேவசபை (பேரம்பலம்) பிராணமயகோசமும், நிருத்த சபை மனோமயகோசமுமாம்.........அன்றியும், திரிபுரா தந்திரத்திற்கூறிய மூன்று கூடங்களும், மூலக்கூடம், தேவக்கூடம், ரகசியமென இங்கே குறிக்கப்பட்டன. மனிதனுடைய ஹ்ருதயம், சரீரத்தின் நடுவில் சிறிது இடப்புறத்தே விலகியிருத்தலால், இங்கும் ஆலயத்தின் சரிநடுவுக்குச் சிறிது இடப்புறத்தே கர்ப்பக்கிருகம் அமைந்திருக்கின்றது. ஹ்ருதயத்திலே இரத்தம் பிரவேசிக்கும் வழி நேரிலன்றிப் பக்கங்களில் இருப்பதால், இங்கும் வழிகள் கர்ப்பக்கிருகத்தின் பக்கங்களில் அமைந்திருக்கின்றன.

இச்சிற்சபையின் தென்புறத்தே மஹாவிஷ்ணு ஸ்தான மும், அதற்குத் தெற்கே ஸம்ஹார நிருத்தமூர்த்தி ஸ்தான மும், அதற்குத் தெற்கே கணபதி ஸ்தானமும், தர்மவடிவா கிய ரிஷபதேவஸ்தானமும், கோபுரமும் இருக்கின்றன. ஐந்து ஆவரணமதில்களும் ஒரேவித அளவில் அமைந்தன. சரீரத்தினும் பிராணன் பன்னிரண்டங்குலம் அதிகமென் னும் யோகநூற் பிரமாணங்கொண்டே இரண்டாவது மதி லிற் கோபுரம் வைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய மகா மேன்மை பொருந்தியது சிதம்பராலயம். இவ்வாலயத்தில் சாஸ்திர விதிப்படி மெய்யன்போடு சுவாமி தரிசனஞ் செய்யின் ஞானம் உதிக்கும்; பந்தம் நீங் கும்; பூர்ணத்வமுண்டாம்; ஆனந்தம் விளையும்; ஆன்மநிலை விளங்கும்; அத்வைத முக்தி லபிக்கும்.

இவ்வுண்மைகளை அறியும் அறிவு சிறிதேனும் இல்லாத வேதபாஹ்யர்களின் புன்மொழிகளைக் கேட்டு, "இதென்ன? கல், மண், செங்கல்தானே!" என்று எண்ணலாகாது. ஒருவன் பூகோளத்தைப் படித்தறிய விரும்பி, அதற்குத் துணைக்கருவி யாய்க்கொண்ட பூகோளபடத்தை, "இது ஏதோ கோடு; பூமியன்று" என்று நினைப்பானாயின், அவன் கருத்து முற் றுப்பெறுவது எவ்வாறு? அப்படத்தைப் பூமியென்று நினைத் தாலல்லவோ முற்றுப்பெறும்? அதுபோல, இவ்வாலயத் தைக் கண்டவுடனே வேறொன்றும் நினையாமல் ஏதோ ஒரு மகா யோகியின் ஹ்ருதயகமலமென்றும், கடவுளு டைய திருவருள் இவ்விடத்திலே நிறைந்திருக்கிறதென்றும், இவ்வித நிலையே முக்திக்கு வழியென்றும் அறிந்து அவ் வழியைச் சிறிது சிறிதாகப் பற்றுதல் வேண்டும்.

நம் தேசத்திலுள்ள தேவாலயங்களின் உண்மைகளை நன்றாக ஆராய்ந்து அறிந்து கடவுளை இடைவிடாது சிந்தித்து உய்யுங்கள். நாஸ்திகர், கிறிஸ்தவர் முதலாயினோர் வார்த்தைகளைச் கேட்டு மதி மயங்காதீர்கள். நாமெல்லோரும் உய்யும்பொருட்டே நம் பெரியோர்கள் அவ்வப்பொழுது எவ்வளவு துன்பம் வரினும் அவைகளுக்குச் சிறிதும் அஞ்சாமல், நம் அருமையான சமயத்தைக் காத்து வந்தார்கள். அதுபோல் அவர் ஸந்ததியிற் பிறந்தவர்களாகிய நீங்களும் உங்கள் உங்களால் இயன்ற அளவு பிரயாசைப்பட்டு நம் சமயத்தைப் போற்றி வரவேண்டும். அப்படிச் செய்தாலன்றி நாம் ஆரியர்களாகோம்.

---

## 2. சிதம்பர மகிமை.

எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரஹமும் உடைய முழுமுதற்கடவுள் தாம் ஒருவரேயாகி விளங்குகின்றார். பசுக்களாகிய ஆன்மாக்களெல்லாம் அவருக்கு என்றும் உடைமைப் பொருள்களாகவுள்ளன. தாம் என்றும் உடையவராகியே நின்று பசுபதியெனப்படும் சிவபெருமான், பிரபஞ்சம் எங்குமாகி நீக்கமற வியாபித்து நிற்பர். ஆயினும் அவ்வுண்மை யாவருக்கும் விளங்குவதன்று. ஆதலினாலே முக்தியடைதல் எளிதன்று. இதனைச் சிவபெருமானே திருவுள்ளங்கொண்டு, தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்பொருட்டு எண்ணில்லாத முக்கிய ஸ்தலங்களைப் பூமியில் அமைத்தருளினர். அவைகளுள்ளே, 68 ஸ்தலங்கள் சிறந்தன; அந்த 68 ஸ்தலங்களுக்குள்ளே 6 ஸ்தலங்கள் சிறந்தன. அந்த ஆறு ஸ்தலங்களுக்குள்ளே

திருவாரூர், காசி, சிதம்பரமென்னும் மூன்று ஸ்தலங்கள் சிறந்தன. திருவாரூரிலே பிறந்தவர்களும், காசியிலே இறந்தவர்களும், சிதம்பரத்திலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தவர்களும் முக்தியை அடைவார்கள்.

## ஸ்தல மகிமை.

திருவாரூரிலே பிறத்தல், முன் செய்த புண்ணிய மிகுதியினாலே தானே நேர்படினல்லது செயற்கையால் அடையத் தக்கதன்று. காசியில் இறக்கலாமெனின், பிறர் பொருள் கொள்ளாது பாபத்துக்குப் பயந்து தர்ம நெறியினாலே சம்பாதித்த பொருளைக்கொண்டு ஜன்மதேசத்தை விடுத்து, வழியிலே இறவாது உயிர்தாங்கிச் சென்று காசியை அடைந்து இறக்கும் வரையில் நல்லொழுக்கத்தோடும் அத் திருப்பதியில் இருந்து இறப்பது எளிதில் முடிவதன்று. சிதம்பரத்திலோவெனின் சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தமாத்திரத்தே முக்தி ஸித்திக்கும். இன்னும் தக்ஷிணதேசத்தார் சிதம்பரத்தை நீங்கி முத்தியைத் தேடிக் காசிக்குச் சென்றால் அது முக்தியைக் கொடுப்பதில்லை. உத்தரதேசத்தார், "சிதம்பரம் முக்தி தரும்" என்று வந்து சேர்ந்தால் இது முக்தியைக் கொடுக்கும். ஆதலின், சிதம்பரமே எல்லா ஸ்தலங்களினுஞ் சிறந்தது.

பிண்டமும் பிரம்மாண்டமும் ஸமம். பிண்டமாகிய சரீரத்தில் இடப்பக்க நாடியாகிய இடைகலைக்கும் வலப்பக்க நாடியாகிய பிங்கலைக்கும் நடுவிலுள்ள சுஷும்நா நாடியும், பிரம்மாண்டத்திலுள்ள இப்பரதகண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில்லையும் சிவபெருமான் ஆநந்த நிருத்தஞ் செய்யும் ஸ்தானங்களாம்.

சரீரம் பிரம்மபுரம். சரீரத்தினுள்ளே இருக்கும் ஹ்ருதய ஸ்தானம் தகரமாகிய புண்டரீக வீடு. ஹ்ருதயஸ்தானத்தினுள்ளே இருக்கும் பிரம்மமாகிய சிவம் ஆகாசம். புறத்தினும் இப்படியே:—பிரம்மாண்டம் பிரம்மபுரம்; பிரம்மாண்டத்தினுள்ளே இருக்குந் தில்லைவனம் புண்டரீகவீடு. தில்லைவனத்தில் நிருத்தஞ் செய்யும் சிவம் ஆகாசம். இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாம். ஆதலாற் சிதம் பரமெனப்படும். இச்சிதம்பரம் எக்காலமும் நீக்கமின்றி விளங்கும் ஸ்தானமானதால் இத்தில்லையும் சிதம்பரம் எனப் பெயர் பெறும்.

## மூர்த்தி மகிமை

சிதம்பரத்திலே ஞானசபையிலே சிவபெருமான் சிவகாமி அம்மையார் காண ஆன்மாக்களின்பொருட்டு அனவரதமும் ஆனந்த நிருத்தஞ் செய்தருளுவர். சபா நாயகர், கோடி சூரியருடைய ஒளிபோன்ற ஒளியும், திருப்புன் முறுவலையுடைய ஒரு திருமுகமும், மூன்று திருக்கண்ணும், கங்கையையும் பிறையையும் கொன்றை மாலையையும் தாங்கிப் பின்தொங்காநிற்கும் திருச்சடையும், சங்கக் குண்டலம் பொருந்திய வலத்திருச் செவியும், திருநீலகண்டமும், டமருகம் பொருந்திய திருக்கரமும், அபயகரமென்னும் வலத் திருக்கரம் இரண்டும், அக்கினியகல் பொருந்திய திருக்கரம் உடுக்கை பொருந்திய கரமென்னும் இடத்திருக்கரம் இரண்டும், புலித்தோலை ஆடையாகக்கொண்டு கச்சையுடைத்தாய் நெருப்புப் பொருந்தி விளங்குந் திருவரையும், முயலகன் மேல் ஊன்றிய வலத்திருப்பதமும், தூக்கி வளைந்த இடத் திருப்பதமும் உடையவர். சிவகாமியம்மையார் பச்சைநிறத்

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

திருமேனியும், திருக்கழுத்திலே பொருந்திய திருமங்கல்ய ஸூத்ரமும், செங்கழுநீர் மலர்பிடித்த வலத்திருக்கையும், கடிக்கீழ்த் தொங்கவிட்ட இடத்திருக்கையும், மிகவொடுங் கிய திருநிலையும் உடையவர்.

சபாநாயகருடைய வடிவம் ஸ்ரீ பஞ்சாக்ஷரவடிவம். வாச்சிய மந்திரமாகிய சிவசக்தி அவருக்கு உண்மைவடிவம். வாசக மந்தரம் அவருக்குக்கற்பிதவடிவம். அவருடையஆநந்த நிருத்தம் பஞ்சகிருத்தியம். சிருஷ்டி கிருத்தியம் டமருகத்தினும் ஸ்திதிகிருத்தியம் அபயகரத்தினும் ஸம்ஹார கிருத்தியம் அக்கினியினும் திரோபவ கிருத்தியம் ஊன்றிய பாதத்தினும் அநுக்கிரஹ கிருத்தியம் குஞ்சிதபாதத்தினும் தோன்றும். அவ்வாநந்த நிருத்தத்துக்கு நிலைக்களமாகிய சபை சிவ சக்தியால் அதிஷ்டிக்கப்பட்ட சுத்த மாயாமயம். சிவசக்தியே அக்கினியிலுள்ள சூடுபோலச் சிவத்தோடு நீக்கமின்றியுள்ள திருவருள்.

வியாக்ரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், உபமன்யு முனிவர், திருவுடையந்தணர்கள், வியாஸமுனிவர், சுகமுனிவர், சௌனக முனிவர், ஜைமினி முனிவர் முதலாயினோர் எண்ணிறந்தோர் சிதம்பரத்திலே வஸித்து நியமமாகச் சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து நடேசப் பெருமானுடைய ஆநந்த நிருத்தத்தைத் தரிசித்து வணங்கித் துதித்துச் சிவானந்தப் பெருவாழ்வு அடைந்தார்கள். உபமன்யு முனிவர் கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷை செய்து சிவபூஜை எழுந்தருளப் பண்ணிக்கொடுத்த சைவாசாரியார். ஜைமினி முனிவர் நடேசப் பெருமானை வேதபாத ஸ்தவத்தினாலே துதித்தவர்; வேதபாத ஸ்தவமாவது முதல் மூன்று பாதமும் தமது வாக்காகவும் நான்காம் பாதம் வேதமாகவும் சொல்லப் பட்ட ஸ்தோத்திரம்.

பரங்கருணைத் தடங்கடலாகிய நடேசப் பெருமானுடைய இலக்கணங்களை உண்மை நூல் வாயிலாக அறிந்து நல்லொழுக்கத்தினின்றும் வழுவாது நிலைகொண்டு அவருடைய விளக்கத்துக் கிடமாகிய திருவுருவை விராட் புருஷனாகிய பிரம்மாவினது பிரம்மாண்டசரீரத்தின் ஹிருதயகமலமாகிய தில்லையிலே நாடோறும் விதிப்படி அன்போடு தரிசித்துக் கொண்டு வந்தவர், அந் நடேசப்பெருமானைத் தமது பிண்ட சரீரத்தினது ஹிருதயகமலமாகிய தகரத்திலே தியானித்துத் தரிசித்துப் பாசம்நீங்கி முக்தியடைவர். இதுவே தகரவித்தை; இது சாந்தோக்யோபநிஷத்திலும், கைவல்யோபநிஷத்திலும் கூறப்பட்டது.

## தீர்த்த மகிமை

சிதம்பரத்திலே பத்துத் தீர்த்தங்களுள்ளன. அவை யாவன:—(1) சிவகங்கை: இது கனகசபைக்கு வடக்கே உள்ளது.

(2) குஹ்ய தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு வடகிழக்கே உள்ள ஸமுத்திரத்திற் பாசமறுத்ததுறை.

(3) புலிமடு:—இது திருக்கோயிலுக்குத் தெற்கே உள்ளது.

(4) வியாக்ரபாத தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு மேற்கே திருப்புலீசுவரத்துக்கு எதிரே உள்ளது. இஃது இளமையாக்கினார் குளமெனவும் பெயர் பெறும்.

(5) அனந்த தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு மேற்கே திருவனந்தேசுவரத்துக்கு முன்னுள்ளது.

(6) நாகசேரி :—இது திருவனந்தேசுவரத்துக்கு மேற்கே உள்ளது.

22770

(7) பிரம்ம தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு வடமேற்கே திருக்களாஞ்சேரியில் உள்ளது.

(8) சிவப்பிரியை:—இது திருக்கோயிலுக்கு வடக்கே பிரம்மசாமுண்டிகோயிலுக்கு முன்னே உள்ளது.

(9) திருப்பாற்கடல்:—இது சிவப்பிரியைக்குத் தென் கிழக்கே உள்ளது.

(10) பரமானந்த கூபம் :—இது கனகசபைக்குக் கிழக்கே உள்ளது.

சிவகங்கை சிவ வடிவம்; அது கோடி ஜன்மார்ஜித மான பாப ஸமூகங்களைத் தனது மாகாத்மிய புண்ய சிரவணத்தினுற் போக்கும் வல்லமையுள்ளது. அச் சிவகங்கையின் தென்கரையிற் சிவபெருமான் ஆனந்த தாண்டவஞ் செய்துவருகிறார். அத்தீர்த்தம் உலகின்கண்ணுள்ள எல்லாப் புனித தீர்த்தங்களினும் மிகப் புனிதமுடையது; புண்யத்தை விருத்தி செய்வதற்குப் பெரிய காரணமானது. தங்க மயமான பங்கஜம் மலர்ந்து எங்கும் மணம் வீசும் அத்தீர்த்தத்தில் பக்தியில்லாது விளையாட்டாகவாயினும் அருந்தல், குளித்தல், ஸ்நானம் முதலியவைகள் செய்தவரைப் பார்த்த யமனுடைய ஹ்ருதயம் நடுங்கும். அவர்களுடைய வரவை நினைத்துச் சிவலோகம் விசாலமடைய விரும்பும். புண்யம் நிறைந்த அத்தீர்த்தத்தில் ஒரு தடவை ஸ்நானஞ் செய்தவன் பிறகு எத்தலத்தில் எவ்விதமாயிருப்பினும் சிவலோகத்தை அடைவான். அதில் ஸ்நானஞ் செய்து சிற்றம்பலத்தில் நர்த்தனஞ் செய்யும் சிவபெருமானைத் தரிசித்துச் சிவ பஞ்சாக்ஷரத்தை 1008-உரு ஜபித்தவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டுச் சிவரூபத்தை அடைவான்.

மேஷ ஸங்கிரமணத்தில் அதில் ஸ்நானஞ்செய்தவர்கள் அளவிறந்த சிவபுண்ணியங்களை அடைவார்கள். துலாமாசத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் ஜனன மரணத்தினின்றும் நீங்குவார்கள். தை மாசத்தில் புண்ய நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் தேவர்களுக்கெல்லாம் தலைவராவார்கள். பங்குனி மாசத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ் செய்தவர்கள் சிவபெருமானது ஸாரூப்யத்தை அடைவார்கள். சுக்கிரவாரத்தில் ஸ்நானஞ் செய்தவர்களின் புண்ய விசேஷம் சொல்லி முடியாது. மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியில் ஸ்நானஞ்செய்தவர்கள்பிதுர்லோகங்களிலுள்ள நூறுகுலங்களைமோக்ஷத்திற் சேர்ப்பார்கள். ஆவணி மாசத்தில் ஸ்நானஞ்செய்து தர்ப்பணஞ் செய்தவர்கள் இருபத்தொரு குலங்களைத் திருப்தி செய்விப்பார்கள். மார்கழிமாசஞ் சுக்கில பக்ஷத்திலாவது கிருஷ்ணபக்ஷத்திலாவது பிதுர்க்களை உத்தேசித்து அச்சிவ கங்கைக் கரையிற் சிராத்தம் செய்பவர்கள் ஏழு குலங்களை உத்தாரணஞ் செய்விப்பார்கள். சந்திர சூரிய கிரகணகாலங்களிலும் திருவாதிரை நக்ஷத்திரத்திலும் ஸ்நானஞ்செய்து சிராத்தம் புரிபவர்கள், கதியற்றவர்களாய்ப் பசியாலும் தாகத்தாலும் வருந்துகிறவர்களான தம் குல பிதுருக்களைப் பிரம்மகல்பம் வரையில் நித்திய திருப்தர்களாகச் செய்வார்கள். அப்புண்ய தடாகக்கரையில் பிராம்மண போஜனஞ் செய்துவைப்பவர்கள் தம் வம்சங்களுடன் சிவ ஸாயுஜ்யத்தை அடைவார்கள்.

பரமானந்தகூபம் சிவசக்தி வடிவம். அதிலே சுக்கிரவாரம் நவமியென்பவைகளில் ஸ்நானஞ் செய்வது விசேஷம். ஐப்பசி மாசச் சுக்கிலபக்ஷநவமி, மாசிமாசச் சுக்கிலபக்ஷ

சதுர்த்தசி, சூரியகிரகணம், சந்திரகிரகணம் என்பவைகளில் ஸ்நானஞ் செய்வது மகா விசேஷம். பரமாநந்த கூபத்தில் ஐப்பசி மாசம் சுக்கிலபக்ஷ நவமியிலே ஸ்நானஞ் செய்து அன்று முதல் ஒருவருஷ காலம் இடைவிடாது நாடோறும் அத்தீர்த்தத்தில் உழுந்தளவு உட்கொண்டு வருவது உத்த மோத்தம புண்யம்.

தை அமாவாசை தோறுஞ் சிவபெருமான் சிவகங்கை முதற் பரமானந்தகூபம் இறுதியாகிய பத்துத்தீர்த்தத்திலும் எழுந்தருளித் தீர்த்தங் கொடுத்தருள்வர். அத்தினத்தில் இப்பத்துத் தீர்த்தத்திலுஞ் சிவபெருமானை ஸேவித்துக் கொண்டு உடன்சென்று சிரத்தையோடு ஸ்நானஞ் செய்வது மகா புண்ணியம்.

---

# 3. ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் சிறப்பு

"துறந்த குறுமுனி யாதி தவத்தினர் தூயகுணம்
செறிந்த பதஞ்சலி நற்புலி யாதிய சித்தர்களும்
சிறந்த வொருநிலை யாகிய வீட்டினிற் சேர்ந்துறைய
அறிந்திடு முத்தரு மேத்துஞ் சபேசனலர்ப்பதமே."

"நானற்ற நீயே யதுவென் றுரைத்தொரு நால்வருக்கு
வானுற்ற தேவருந் தேடற் கரியதோர் வாழ்வளித்தாய்
தேனுற்ற சோலைத் திருப்புலி யூருறை செஞ்சடையாய்
ஊனுற்றவாழ்க்கையொழித்தெனக் குன்னருளூட்டுவையே"

**ஸ**ர்வதுக்க நிவிர்த்தியும் பரமானந்த ப்ராப்தியும் வடிவமாக வுள்ள மோக்ஷத்தை அடைவதற்கு முறையே சாதனமாயிருப்பன கர்மம், பக்தி, ஞானம் என்பனவாம்; அவற்றுள்,

பக்தி, கர்மத்தை நிஷ்காம்யமாகச் செய்தற்கும் ஞானத்தைச் சித்தசுத்திவாயிலாக எளிதில்உண்டாக்குவதற்கும் சாதனமாயிருப்பதாம். அது, பொருளானது அறத்தையும் இன்பத்தையும் உண்டாக்குவதற்குச் சாதனமாயிருத்தல் போன்றது. பக்தியோ, குருபக்தி, ஈச்வரபக்தியெனச் சிறப்புவகையால் இருவகையாயிருப்பதாம். அவற்றுள் ஈசுவரபக்தி, குருபக்தியை மேன்மேலும் பெருகச் செய்வதற்கும், அவரை (குருவை) ஈசுவர ஸ்வரூபமாகப் பாவிப்பதற்கும் தக்க ஸாதனமாயிருத்தலின், நம் முன்னோர்க்கு மிக முக்கிய ஸாதனமாயிருப்பது அவ்வீசுவர பக்தியேயாம். அஃது அவர் கொண்டருளிய பல அவதார விசேஷங்களாற் பலவகைத்தாம். ஈசுவரனது அவதார விசேஷங்களுள், ஸ்ரீ நடராஜ மூர்த்தி அவதாரம் எஞ்ஞான்றும் பரம சாந்த ஸ்வரூபமாகவேயிருப்பதாதலின், அம்மூர்த்தியின் பக்தி ஈசுவர பக்தியுள் மிகச் சிறந்ததாம். ஸ்ரீ நடராஜபக்தி அல்லது தியானம் மிகச் சிறந்ததாமென்பதை விளக்குதற் பொருட்டன்றோ சாந்தோக்யோபநிஷத் முதலியன அதனை வியந்து கூறுகின்றன? ஈசுவர தியானங்களுள் மிகச் சிறந்ததாயுள்ள ஸ்ரீ நடராஜ மூர்த்தித் தியானத்தைத் தேசிகமூர்த்தியின் வாயிலாகக் கேட்டுணர்ந்து செய்வாராயின், சமையலுக்கு நெருப்புப்போல, மோக்ஷத்திற்கு நேர் ஸாதனமாயுள்ள தத்துவஞானம், அவருக்கு எளிதில் உண்டாகுமென்பது நன்கு விளங்கும்.

## ஸ்ரீ நடராஜ ஸேவை

இந்நடராஜமூர்த்தி பதஞ்சலி, வியாக்ரபாதர் முதலான மகாத்மாக்கள் பரமாநந்தமயமாய் விளங்கும்படி

பூலோகத்தின்கண் ஆநந்த நடனஞ் செய்தருளுகின்றாராதலின், இம்மூர்த்தியினது பாதஸேவையே நாம் பரமானந்தமடைவதற்குத் தக்க ஹேதுவாம். கரண வியாபாரமுடைய ஒவ்வொரு பிராணியும் துக்கநீக்கத்தினையும் சுகப்பேற்றினையும் விரும்புவது இயல்பு. இது நமதநுபவத்தினால் விளங்குதலின், துக்க நீக்கத்தினையுஞ் சுகப்பேற்றினையுங் கருதி, ஸ்ரீ நடராஜ மூர்த்தியினது திருவடிகளைத் தஞ்சமாக அடைந்து அன்பு மிக்குச் சேவித்தலே நமது முக்கிய கடமையாகும்.

பெருந்துன்பமுற்ற ஒருவன், தன் துன்பத்தை ஒழித்து இன்பத்தையடையப் போராற்றலும் பெருங்கருணையுமுடைய ஒருவனை ஆதாரமாக அடைந்து அவனது திருவடியில் விழுந்து பிரார்த்திப்பதுபோல, பிறப்பென்னும் பெருந்துன்பமுடைய நாம் அத்துன்பத்தினை யொழித்து முத்தியென்னும் இன்பத்தினை அடையுமாறு, முடிவிலாற்றலும்பொருளுமுடைய ஸ்ரீ நடராஜ மூர்த்தியைத் தஞ்சமாக அடைந்து, அம்மூர்த்தியின் இன்பமணங் கமழும் பொற்பாத கமலங்களில் விழுந்து பிரார்த்தித்தல் வேண்டும். இதுவே நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியான துணையாகும். பாதஸேவையே பரமாநந்தம் பெறுதற்குத் தக்க ஸாதனமாயிருப்பதுபற்றியன்றோ, தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார், "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅ ரெனின்", "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ் வார்", "வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க், கியாண்டு மிடும்பை யில", "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவ னடிசேரா தார்" என்று திருவாய் மலர்ந்தருளினார்?

## பஞ்ச நடன சபைகள்

இந் நடராஜமூர்த்தி நடனஞ் செய்யும் ஸ்தலங்கள் பலவற்றுள் சிறப்புடையன ஐந்தாம். அவை திருவாலங்காடு, சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றால மென்பன வாம். இவற்றிலுள்ள நடன சபைகள் முறையே இரத்தின சபை, பொற்சபை, இரசத (வெள்ளி) சபை, தாமிர (செம்பு) சபை, சித்திரசபையென்பனவாம். இவ்வைந்து சபையிலும் அன்புடன் சென்று அருள் நடனங்கண்டு இன்புறுவானவரே இனிப் பிறவாநிலையை அடைவரென்க.

## நடராஜ வடிவமே ஸ்ரீ பஞ்சாக்ஷரம்

அன்பரெல்லாம் என்புருகிப் பரவசமாகும் வண்ணம் ஸ்ரீ சந்திரசேகரன், சூக்ஷ்ம பஞ்சாக்ஷரமென்றும் ஒரு தலை மாணிக்கமென்றுஞ் சொல்லப்படும் 'சிவாயநம:' என்னுந் திருவஞ்செழுத்தின் திருவுருக்கொண்டு உயிர்களுக்கு நேர்ந்துள்ள பிறவிப்பிணியென்னும் அபாயமற, ஆநந்த நிருத்தஞ் செய்தலை அறிந்தவர்களுக்கன்றோ அநாதியாய்த் தொடர்ந்து வந்துள்ள பிறப்புமூப்புப் பிணியோடு சாக்காடு ஒழியும்? இதுபற்றியன்றோ ஔவைப் பிராட்டியார், "சிவாய நம வென்று சிந்தித் திருப்போர்க், கபாய மொருநாளு மில்லை" என்றருளிச்செய்தனர்? மனம் வாக்குக் காயமென்னுந் திரிகரணமும் மாறுபாடின்றி ஒருமைப்பாடு பெற்றவிடத்துத் தான் சிவாநந்த (பிரமாநந்த) நிலையுண்டாதலின் அதற்குரிய ஸாதனம் மேற்கூறியவாறு பஞ்சாக்ஷர வடிவமாய் மலைமகள் காண மகிழ்வுடன் ஆடும் ஸ்ரீ நடராஜவடிவ தரிசனமேயாம். வாக்காற் பஞ்சாக்ஷரஜபமும் மனத்தாற் பஞ்சாக்ஷர தியானமும் செய்யுமிடத்துக் கண்ணாற்காணும் பஞ்சாக்ஷரம், ஸ்ரீ

நடராஜ விக்கிரகமன்றி வேறொன்றின்மையின் அம்மூர்த்தியைத் தரிசித்தல் அத்தியாவசியமாம்.

அந்நடராஜப் பெருமான், திருவடி நகாரமாகவும், திருவுந்தி மகாரமாகவும், திருத்தோள் சிகாரமாகவும், திருமுகம் வகாரமாகவும், திருமுடி யகாரமாகவுங்கொண்டு ஹ்ருதய குகையாகிய தகராகாசமென்னுஞ் சிதம்பரத்தின்கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்தலை ஸத்குரு மூலமாய்ச் சந்தேக விபரீதங்களற அறிந்து, இந்நடனத்தின் உண்மையை ஆராய்ந்து அறிபவர்க்கே இனிப் பிறவாநிலை உண்டாம்.

## நடன ஸேவைகளின் வகை

ஆகாசமானது பூதாகாசமென்றும், மனாகாசமென்றும், சிதாகாசமென்றும் மூவகைப்படும். இம்மூன்றுஆகாசங்களிலும் ஸச்சிதாநந்தப் பரம்பொருள் நடித்து ஜீவர்களுக்கு இம்மை மறுமை வீடென்னும் மூன்றையும் அருளிச் செய்கின்றாரென்பது வேதாகமங்களின் சித்தாந்தமாம். பூதாகாச நடன ஸேவையாவது, ஆங்காங்குள்ள சிவஸ்தலங்கள் பலவற்றுள்ளுஞ்சென்று குறிப்பிட்ட நாட்களில் ஆகமவிதிப்படி ஸ்ரீ நடராஜப் பெருமானது திருக்கூத்தைத் தரிச்சித்தலேயாம். மனாகாச நடனஸேவையாவது, பஞ்சாக்ஷர வடிவமாய் விளங்கும் ஸ்ரீ நடராஜ மூர்த்தியை மனத்தால் நன்கு தியானித்தலேயாம்; இஃது ஒருமுகப்பட்ட மனத்தினருக்கே ஸாத்தியமாம். சிதாகாச நடனஸேவையாவது, பஞ்சாக்ஷரத்தின் லக்ஷ்யார்த்தமாகிய 'சிவமே நான்' என்று ஸோஹம் பாவனை செய்வதாம். இதுவே சிவயோகமெனப்படும். பூதாகாச நடனஸேவையால் இம்மைப்பயனும், மனாகாச நடனஸேவையால் மறுமைப்பயனும், சிதாகாசநடன ஸேவையால்

மோக்ஷமும் விளைக்கின்றன. ஆதலின், இம்மூன்று ஸேவையும், அவ்வவ்வதிகாரிகளுக்குத் தக்கவண்ணம் அவரவர்க்கு அத்தியாவசியமாம்.

## ஆநந்தத் தாண்டவத்தின் தத்துவம்

மாயாமலத்தினால் உண்டான கர்மபாசத்தாற் கட்டுண்டு சுகதுக்காதிகளால் மொத்துண்டு உழலும் ஜீவர்கள் தங்களுக்கு இயல்பாயுள்ள சச்சிதாநந்த நிலையை அடைவதற்குப் பரமசிவத்தின் ஆநந்தத்தாண்டவ தரிசனமே சிறந்த சாதனமாம். ஈசனது பஞ்சகிருத்தியங்களாகிய சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம் (மறைப்பு), அனுக்கிரஹம் (அருள் புரிதல்) ஆகிய ஐந்தொழிலும் அவரது நடனமேயாம். அப் பஞ்சகிருத்தியங்களைச் செவ்வனே உணர்ந்தோர்க்கே, "எமக்கென இவ்வுலகத்தில் ஒரு செயலுமில்லை; எல்லாம் ஈசனுடையனவே" என்னுந் திடம் உண்டாகும்; சுகம் துக்கம், லாபம் நஷ்டம், ஜயம் அபஜயம், நன்மை தீமை முதலிய இருமைகளிற் சிக்கிச் சுழலும் மனமானது பதைப்பற்று உபசாந்தி நிலையை அடையும். ஆதலின் பஞ்ச கிருத்தியங்களின் தத்துவ ஆராய்ச்சி அவசியஞ் செய்யத்தக்கது.

## பஞ்சகிருத்திய தத்துவம்

சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரஹ மென்பன பஞ்சகிருத்தியங்களாம். இவை பரமசிவத்தின் தாண்டவஸ்வரூபமேயாம். தாண்டவமென்பது ஒருவகைக் கூத்து. இஃது அசைதல் வடிவினது. இது பரமசிவத்தின் அபின்ன சக்தியான சிற்சக்தியின் வியாபகத்தாலன்றிக் கூடாது. இந்தச் சிவாபின்ன சக்தியே, தான் செய்யும் தொழிலுக்கு இணங்க, பராசக்தி யென்றும், ஆதிசக்தியென்

றும், இச்சாசக்தி யென்றும், ஞானசக்தியென்றும், கிரியா சக்தியென்றும் ஐவகையாகக் கூறப்படும்.

இவற்றுள், பராசக்தி பரமசிவம்போல் எங்கும் வியாபித்துப் பக்குவமான ஜீவகோடிகளுக்கு அனுக்கிரஹம் செய்வதாம். இதுவே அனுக்கிரஹ கிருத்தியஞ் செய்யும் அருட்சக்தியாம்.

ஆதிசக்தி:—இது திரோதான சக்தியாம். இது ஸ்வரூபத்தை மறைப்பதாம்; ஆன்மாக்களுக்குள்ள ஆணவ மலம் பக்குவமாகும்படி போகத்தைக் கொடுப்பதாம்.

இச்சாசக்தி:—இதுவே ஸம்ஹார சக்தியெனப்படும்; உயிர்களுக்கு மலத்தை நீக்கிச் சிவானுபவம் தரும்பொருட்டு ஏற்பட்டதாம். இதுவும் கருணைவடிவமேயாம்.

ஞானசக்தி:—இது ஸ்திதித்தொழிலைச் செய்யுஞ் சக்தியாம். உயிர்களின் மலத்தை நீக்கி அவர்கள் சிவானுபவத்தைப் பெறும்பொருட்டுச் செய்ய வேண்டிய உபாயங்களை உணர்த்துவது இது.

கிரியாசக்தி:—இது கர்மத்துக் கீடாக ஆன்மாக்களுக்குத் தேகாதிகளை (தனுகரணபுவன போகாதிகளை) உண்டாக்கும் சக்தியாம்.

பரமசிவம் இவ்வைந்து தொழிலையும் திருவருளின் விளையாட்டாகவும், ஜீவாத்மாக்களின் துன்பகாரணமான ஜனனமரண சாகரத்தினின்றும் அவர்களை எடுத்து அருள் புரிவதற்காகவும் செய்கின்றனர். எங்ஙனமெனில், அழித்தல் ஆன்மாக்களின் இளைப்பை ஒழிப்பதற்கும், படைத்தல் மலபரிபாகம் வருவித்தற்பொருட்டும், காத்தல் இருவினைப் போகங்களை உண்பித்து அவ்வினைகளை ஒழித்தற் பொருட்டும், மறைத்தல் அவ்வினைப் போகங்களில் அழுத்

துதற்பொருட்டும், அருளல் மலத்தை நீக்கி அத்வைத சிவத்துவத்தை அளித்தற்பொருட்டுமாம். ஆதலின், அருளலைப் போலவே மற்றைத் தொழில்களும் அருளுக்குத் துணையாயுள்ளமையால் அருட்டொழில்களே ஆகுமெனக் கூறத்தகும்.

இங்ஙனம் பதியேயான ஸ்ரீ நடராஜப் பெருமான் ஐந்தொழிலைச் செய்யினும் விகாரப் படுவதில்லை. அஃது எங்ஙனமெனின், ஆகாயத்தில் விளங்கும் ஆதித்யனது ஸன்னிதியிலே தாமரைகளில் ஒன்று அலரும்; ஒன்று அலர்தற்குப் பக்குவமான மொட்டாயிருக்கும்; மற்றொரு வகையான மலர் வாடி உலரும். இங்ஙனம் அலர்தல், அரும்புதல், உலர்தல் ஆகிய முத்தொழிலும் சூரியனின் ஸன்னிதான விசேஷத்தால் நிகழினும் சூரியன் விகாரப்படாததேபோல, பதியின் ஸன்னிதான விசேஷத்தால் ஜடசேதனப் பிரபஞ்சமெல்லாம் ஐந்தொழிலின்பாற் படிந்துஞ் சிவம் நிர்விகாரியாகவே யிருக்கும். இதுபற்றியன்றோ தாயுமானவப் பெருந்தகையாரும், "ஆக்கி யளித்துத் துடைக்குந் தொழிலத்தனை வைத்து மெள்ளத்தனையேனும், தாக்கற நிற்குஞ் சமர்த்தன்" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இங்ஙனம் பஞ்சகிருத்தியங்களின் ஸ்வரூபத்தை நன்குணர்ந்து, "உலகத்தில் நிகழும் யாவும் அவனுடையனவே; நாமொன்றுஞ் செய்வதற்குச் சுதந்தர முடையவரல்லேம்" என்று பரமசிவத்தின் பாதாரவிந்தங்களில் தஞ்சம் அடைவதே நாம் பரமானந்த முறுதற்குச் செய்யவேண்டிய காரியமாகும்.

ஆலயங்களில் ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் உற்சவ காலங்களில் மேற்கூறிய பஞ்சகிருத்தியங்கள் கீழ்க்கண்ட ஐதிகங்

களாற் குறிப்பாகக் காட்டப்படுகின்றன. அவையாவன:— (1) சிருஷ்டி: ஸ்ரீ நடராஜமூர்த்தி சிற்சபையினின்று அபிஷேக மண்டபத்துக்கு எழுந்தருளுதல்; (2) ஸ்திதி: ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு (அபய) ஹஸ்தத்திற் கங்கணம் (காப்பு) சாத்துதல் (இரக்ஷாபந்தனம்); (3) ஸம்ஹாரம்: மேற்படி மூர்த்திக்குத் திருச்சாந்து சாத்துதல்; (4) திரோபவம்: பச்சைக் கர்ப்பூரஞ் சாத்துதல்; தற்காலத்தில் வெள்ளைச் சாத்துப்படியென்று இது வழங்கப்படுகின்றது; (5) அனுக்கிரஹம்: தரிசனம். இவ்வாறு குறிப்பாயுணர்ந்து ஐதிகங்களின் உண்மையை ஆய்ந்து பரமசிவத்தின் பஞ்சகிருத்தியங்களை மனத்திற் பாவனைசெய்து "எல்லாம் அவனுடைய தொழிலே" என அகந்தை மமதைகளை அறவே யொழித்துப் பரமாநந்தமாய் விளங்க நாம் ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும்.

---

# 4. ஸ்ரீ நடராஜமூர்த்தியின் தத்துவார்த்தம்

நடராஜ குரு

நடராஜன் என்றால் நடன ஸபைக்கு அதிபதி என்பது அர்த்தம். இவ்வுலகமே நடனமாடும் ஸ்தலம். நாடகத்தில் பற்பல வேஷங்கள் வருகின்றன. அதுபோல, இவ்வுலகத்திலே பற்பல ஜீவராசிகள் தோன்றி நடித்து மறைந்துபோகின்றன. இப்படி இளையர், விருத்தர், ஆண், பெண், மநுஷ்யன், மிருகம், புற்பூண்டு முதலிய பொம்மைகள் உலகமாகிய நாடக ஸ்தலத்தில் தோன்றியாடுவதெல்லாம் பரமாத்மாவா

கிய கடவுளின் சக்தியாலேயன்றி வேறல்ல. பொம்மையை ஆட்டினால் அஃது ஆடாமலிருக்குமா? வீணையை மீட்டினால் அது பாடாமலிருக்குமா? அதுபோல் நம்மை ஆட்டிவைக்கும் பரமாத்மாவுக்கே நடராஜனென்று பெயர். அந்தப் பரமாத்மாவொன்று இல்லையானால், இவ்வுலகமெல்லாம் ஜடமாயன்றோ இருக்கும்?

மனிதனுடைய மனத்துக்கு ஆத்மாவே உண்மையான உபாத்தியாயர். ஆதலின் நடராஜனே நம்முடைய குரு. உலகத்தில் இரண்டுவிதமான ஆசார்யர்கள் உண்டு. பெயருக்கு ஆசார்யரொருவர்; உண்மையான ஆசார்யரொருவர். முன்னாற் கூறப்பட்டவர் சிஷ்யனுக்கு எல்லாவற்றையும் கற்பித்து அவனைத் தம் வழியில் நடத்துகிறார்; இப்படிச் செய்பவரைத்தான் நாம் குருவென்கிறோம். ஆனால் உண்மையாகவே நாம் கற்றுக்கொண்ட விஷயங்களெல்லாம் நமக்குள்ளிருந்தே வந்தவை. செடிகள் பூமியிலிருந்து தாமே உண்டாகின்றன. நாம் விடும் தண்ணீரும் போடும் எருக்களும் அவைகள் வளருவதற்கு அனுகூலமேயன்றி வேறல்ல. இம்மாதிரியே நமக்குள்ளிருக்கும் மனம், தானே விருத்தியாக வேண்டும். அப்படியானால் நடராஜனே ரூபத்தோடு கூடிய உண்மையான குரு. குருவின் முக்கியமான கடமை யென்ன? பிறருக்குப் போதிப்பதைப்போல் தாம் நடப்பது; அதாவது, தாம் நடந்து காட்டுவதால் பிறருக்குத் தாம் போதிப்பதை விளக்குவது.

## நடராஜ ஸ்வரூப உண்மை

நடராஜ மூர்த்தியின் வலதுகை ஒன்றில் உடுக்கை யென்ற ஒரு வாத்தியம் இருக்கின்றதே, அஃது என்ன? அஃது இவ்வுலகத்துக்கான காரணத்தைக் குரு கொண்டிருக்கிறாரென்பதைக் குறிப்பிடுவதற்குள்ளது. சப்தத்தினால்

இவ்வுலகம் நிலைபெற்றதென்பது சாஸ்திரம். சப்தத்தை உண்டாக்கும் உடுக்கை ஸ்ரீநடராஜமூர்த்தி கையில் வைத்திருப்பதால் அவர் தம்முடைய இஷ்டப்படி உலகத்தை எப்படி வேண்டுமானாலும் ஆட்டலாமென்று ஏற்படுகிறது. ஞானிகளுக்கு, வேண்டுமானால் இவ்வுலகமிருக்கும், வேண்டா விட்டால் உலகமில்லை.

நடராஜமூர்த்தியின் ஒரு பக்கத்திலிலுள்ள மான், மனதைக் குறிக்கிறது. ஏனெனில், மானைப்போல் மனம் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் தாவுகிறதல்லவா? மானைப் போல் தாவும் மனதையுடைய மனிதர்களுக்கு ஆத்மாவின் தரிசனம் அகப்படுவது அருமை.

நடராஜர் தாம் கொன்ற புலியின் தோலைத் தரித்துக் கொண்டிருக்கிறார். அகங்காரந்தான் அப்புலி. அகங்காரமென்னும் புலி யாரைக் கண்டாலும் எதிர்க்கிறது. அதைக் கொல்வதற்கு நடராஜமூர்த்தியே தக்கவர்.

நடராஜர் தம் தலையிற் கங்கையைத் தரித்துக் கொண்டிருக்கிறார். கங்கைதான் சித்சக்தி. அதுதான் ஞானம்; அது வெகு குளிர்ச்சியும் பரிசுத்தமும் பொருந்தியது. அவர் சிரஸிலிருக்கும் சந்திரன் சீதளமாயும், ப்ரகாசமாயும் இருக்கிறது; அஃது ஆத்மாவின் ப்ரகாசத்தைக் காட்டுகிறது.

ஸ்ரீநடராஜமூர்த்தி ஒரு காலின் அடியில் முயலகனைப் போட்டு மிதிக்கிறார். அந்த முயலகன் தான் மகாமாயை. இந்த மாயையே பிறப்பிற்கும் இறப்பிற்கும் காரணம். இன்னும் அவர் ஒரு பாதத்தை மேலே தூக்கிக்கொண்டிருப்பது துரியத்தின் நிலைமையை உணர்த்துகிறது. அது ஜாக்கிர சொப்பன சுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளையும் கடந்து அப்பாலுள்ள ஸ்திதி. அதற்குப் பின்னால், மனசு, மாயை, உலகம் இவைகள் கிடக்கின்றன. ஒரு வலது கை ஸமாதானத்

தைக் காட்டுகிறது; அதாவது ஞானி அனுபவிக்கும் மௌன மாகிய ஆனந்தத்தைக் குறிக்கிறது. நடராஜரது இடது கை யொன்றில் இருக்கும் மழு (அதாவது நெருப்பு) அவர் ஆத்மாவின் சொரூபமாகிய ஜ்யோதியைச் சிஷ்யர்களுக்கு நேரில் காட்டி உபதேசிப்பதை உணர்த்துகிறது.

## தில்லை வனம்

இவ்வாறு ஸ்ரீ நடராஜர் நடனமாடும் ஸ்தலம் தில்லை வனம். மானிட சரீரத்திற்கும் இப்பேருலகத்திற்கும் வனத்தை உவமை கூறுவதுண்டு. வனத்திற் பற்பலமரங்களும் செடிகளும் விலங்குகளும் இருப்பதுபோல, மனிதனுடைய சரீரத்திலும் அநேக வஸ்துக்கள் இருக்கின்றன. நாடக ஸ்தலத்தின் உயர்ந்த மேடை ச்மசானம். இந்த ச்மசானத்தில் ஆசாபாசங்களும், நாம ரூபங்களும், உலகமாகிய மாயையின் தோற்றமும் அழிந்து பஸ்மீகரமாகின்றன.

மேற்கூறிய நடராஜமூர்த்தியின் சில லக்ஷணங்களால் நாம் அறிந்துகொண்ட விஷயங்களாவன:-நடராஜர் என்னும் குரு மாயையைத் தொலைத்து உலகத்தை நம்முள் அடக்கி நாம் அதில் அகப்பட்டு விழிக்காமல் சலன மனதைப் பின்னல் தொலைத்து அகங்காரத்தை அழித்து எவ்வகையான ஆசையும் பாசமுமின்றி ஆத்மாவின் சொந்த ஸ்தானமாகிய சிதாகாசத்தை அடைந்து பிரம்மானந்தத்தை அனுபவிக்கும் படி நமக்குப் போதிக்கிறார். இப்படிப்பட்ட நடராஜ விக்ரஹத்தைக் கேவலமாக நினைக்கும் மாந்தர்கள் பிறவிக் குருடர்களல்லவோ? இத்தகைய மூர்த்தியையும், இம்மூர்த்தி எழுந்தருளிய சிதம்பரத்தையும் தரிசிப்பது நமது முக்கிய கடமையாம்.

சிதம்பர க்ஷேத்திரம், மற்றெல்லா க்ஷேத்திரங்களிலும் சிறந்து விளங்குவது. அது எல்லா • மதஸ்தர்களுக்கும்•

பொதுவான ஒரு குறிப்பைக் காட்டுகிறது. "நமது தேக மாகிய கோயிலில் ஆண்டவன் வசிக்கிறார்; நமது உள்ளத்தில் ஆண்டவன் நடனம் புரிந்துகொண்டிருக்கிறார்" என்ற குறிப்பே அது.

ஒரு மனிதன் தெற்கே பாதமும் வடக்கே சிரஸும் வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்திருந்தால் அவன் தேக அங்கங்கள் எவ்வாறு அமைந்து நிற்குமோ, அவ்வாறே எல்லா அங்கங்களையும் விளக்கிக் காட்டும் குறிகளோடு அக்கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. எவற்றைக்காட்டி விளக்கக் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றனவோ, அவை யாவற்றிற்குங் குறிகள் பூரணமாய் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களில் தலைமையுடைய கோயில் அது. அதனாற்றான் 'கோயில்' என்றாலே சிதம்பரக்ஷேத்திரத்தைக் குறிக்கும்.

அதில் அமைந்துள்ள கடவுளும் சமயாதீதக்கடவுளே. அவர் உருவத்தில் அடங்கிய அங்கங்கள் முதலியயாவும், அவர் ஸ்வரூபத்தை விவரமாக விளக்கிக்காட்டுங் குறிகளேயாகும். அவர் நடிக்கும் இடம் பொன்னம்பலமென்றும், சிதாகாசமென்றும், சுடலையென்றும் கூறப்படும். அம்பலமெனில், ஆகாயம், வெறுவெளியென்பது பொருள். சிதாகாசமென்றால் சித்தத்திலுள்ள ஆகாசம். நமது மனம் பஞ்சபூதங்களால் படைக்கப்பட்டதால் அதற்கு ஐந்துவித குணங்களும் ஐந்து பெயர்களும் உண்டு. அவையே, உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்றும் அந்தக்கரணங்கள் ஐந்து என்றும் கூறுவன. இவற்றுள், உள்ளமென்பதே ஆகாசாம்சம்; சத்துவமானது களங்கமற்ற ஆகாசம்போற் பரிசுத்தமாகச் சலனமின்றியுள்ளது. அதனால் அதற்குச் சிதாகாசமென்று பெயர். மனதிலுள்ள அகங்காரம், காமம், குரோதம்,

லோபம், மோகம் முதலிய எல்லாப் பேய்களும் ஞானாக்கினியால் சாம்பலாய் எரிக்கப்பட்ட பிறகே, உள்ளம் தன் ஸ்வரூப மட்டுமாய்த் தனித்து நிற்கிறது. மேற்கண்ட பேய்களெல்லாம் அங்கே தகனஞ் செய்யப்படுவதால் அதற்கு மயானமென்றும், சுடலையென்றும் பெயர்கள் வந்தன. அதில் நடனஞ் செய்யும் பகவானுக்குச் சுடலையாடியெனப் பெயர் வந்தது. அப்பேய்கள் தகனஞ் செய்யப்பட்டபிறகு ஏற்படும் ஞானநிலையில் அங்கே நடிக்கும் பகவான், அவை தகனமாவதற்கு முன் இருக்கும் அஞ்ஞானதசையிலும் அங்கு நடித்துக்கொண்டுதான் இருக்கிறார். ஆகாசம் மற்ற எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்துக் கொண்டிருப்பது போல், உள்ளமே மற்ற எல்லாக் குணங்களுக்கும் இடங் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

அஞ்ஞானகாலத்தில் ஆண்டவன் அங்கே நடிக்கும் போது இப்பேய்களும் இருப்பதால் அவருக்குப் பேயோடாடி என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. இவ்வுண்மையையறியா மூடர்கள், 'அசுத்தமான சுடுகாட்டிற் போய் பிசாசுகளோடு கூத்தாடுவோனுந் தேவனுவனே?' என உளறலாகும்.

## ஸ்ரீ நடராஜரின் விச்வ ஸ்வரூபம்

ஸ்ரீ நடராஜருடைய ஸ்வரூபம் அவர் உண்மை நிலையையே காட்டுகிறது. இப்பிரம்மாண்ட சொரூபமே அவர். ஆகையால் அண்டமுகடே அவருடைய சிரம். மின்னலும் ஜலமும் சந்திரனும் அண்டமுகட்டிலேயே இருக்கின்றன. மின்னற் கூட்டங்களே அவருடைய சடைகள். அதனால் தான் அச்சடைகள் ஜோதிர்மயமான பொன்னிறமுடையவையென்று கூறப்பட்டிருக்கின்றன. கங்கையும், சந்திரனும் அவர் ஜடாபாரத்தில் இருக்கின்றனவென்றுங் கூறப்படும். நாகம் குண்டலிசக்தியைக் குறிக்கிறது; "மின்னிய மின்ன

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

மின் பிரகாசம் நின்சடையே'' என்றனர் பட்டினத்தடிகள். பூலோகமே அவர் தேகம். காற்றே அவர் சுவாசம். பாதாளமே அவர் பாதங்கள். தேகமுழுதும் விபூதிதாரணம் அவர் சத்துவ சொரூபமான ஞானரூபியென்பதைக் குறிக்கிறது. கையிற்றரித்த முத்தலைச் சூலம் மூவுருவும் ஒருருவே என்பதைக் குறிக்கிறது.

சிதம்பர க்ஷேத்திரம் இவ்விதமாக, 'ஆண்டவன் உன் உள்ளத்தில் நடனஞ்செய்து கொண்டிருக்கிறார். இங்குக் காண்பதுபோல் உன்னுள்ளத்திற் கண்டு தரிசி' என்கிற சமயப் பொதுவான குறிப்பையே காட்டுகிறது. இதனால் நடராஜர் சமயாதீதக்கடவுளென்பது விளங்கும். இதுபற்றியே தாயுமானவர், "எல்லாம் வெளியேயென்ன வெச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்'' என்றார். தாயுமானவர் அருளிய "விளங்க வெண்ணீறு பூசி'' என்று தொடங்கும் பாட்டையும், அதற்கடுத்த பாட்டையும், "சிதம்பர இரகசியம்'' என்ற பதிகத்திலுள்ள "சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு'' என்று தொடங்கும் பாட்டையும், அதற்கடுத்த பாட்டையும் பார்க்க இது நன்கு விளங்கும்.

---

# ஸ்வயம்பிரகாச விஜயம்

## இப்புஸ்தகத்தில் அடங்கியுள்ள ஸ்வாமிகளின் உபந்யாசங்கள்


தெய்வ வணக்கம்

1. ஆலய வழிபாடு
   மஹான்களின் நிலை
   திரவியஸம்பாதனம்
2. ஆலய தத்துவ நிரூபணம்
3. அர்ச்சாவதார ஸ்தல விசேஷம்
4. சிதம்பர ரகசியம்
5. சிதம்பர மகிமை
6. ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் சிறப்பு
7. ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் தத்துவார்த்தம்
8. சிவஸ்வரூபதத்துவம்
9. ஸப்த க்ஷேத்திரங்கள்
10. ஸ்ரீரங்க வரலாறு
11. வரலக்ஷ்மி விரதம்
12. மஹாலயபக்ஷமும் நவராத்திரியும்
13. பக்தி
14. விபூதி மகிமை
15. ருத்திராக்ஷ மகிமை
16. பஞ்சாக்ஷர ரகசியம்
17. நல்லொழுக்கம்
18. யோக்கியதையின் உயர்வு
19. பரம புருஷார்த்தம்
20. கல்வியின் மர்மங்கள்
21. வித்யா
22. கர்மம்
23. கிரியையின் பெருமை
24. பிராம்மணர்களுக்குரிய தர்மங்கள்
25. ஸந்தியாவந்தனம்
26. காயத்ரீ
27. வீரசைவம் அல்லது இலிங்க சைவம்
28. நவீன நாகரிகம்
29. எனக்குப் பிரியமுள்ள ஸாது யார்?
30. ஞானம்
31. மோக்ஷ விளக்கம்
32. ஆனந்தம்
33. கதம்பமாலை


# பிரச்னோத்தர மாலிகா

'ஸ்வயம்பிரகாச விஜயம்' என்னும் புஸ்தகத்தில் ஸ்வாமிகளுடைய சிஷ்யராகிய துரியானந்த ஸ்வாமிகள் கேட்ட 120 கேள்விகளுக்குரிய விடைகள் ஸ்வாமிகளால் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன. அவை 'பிரச்னோத்தர மாலிகா' என்னும் பகுதியிற் காணப்படும். அப்பகுதியிலுள்ள விஷயங்களிற் சில வருமாறு:—

1. ஸஹஜ நிஷ்டையில் ஸந்தேஹம்
2. மிருகங்களின் அறிவு
3. யஞ்ஞம் ஜீவவதை யன்று
4. தேவர்களுக்குரிய வரி
5. ஹிம்சை எது?

6. ஞானயஞ்ஞம்
7. அந்தர்முக அசுவமேதம்
8. மனக்குரங்கு
9. மனோபாவமும் கர்மமும்
10. பிராரப்தமும் வாஸனையும்
11. கடவுளாகியகற்பகவிருக்ஷம்
12. ஈச்வரனாகிய யஜமானன்
13. அவதூதாச்ரமம்
14. லோகோபகாரம்
15. யோகப்ரஷ்டர்கள்
16. அம்ருதமதனம்
17. தேவாஸுர யுத்தம்
18. ஸர்வஸங்கபரித்தியாகம்
19. அத்தியாச வகை
20. உண்மைஞான திருஷ்டி
21. சத்தியத்தின் வகை.
22. வேத அர்த்த நிர்ணய முறை
23. பிதுர் தேவதைகளின் செயல்
24. நால்வகை முக்தர்கள்
25. ஜீவன் முக்தியும் விதேக முக்தியும்
26. ஞானிகளும் யோகிகளும்
27. கிரமமுக்திகள்
28. ஸ்துதியும் நிந்தையும்
29. பந்தமோக்ஷங்கள் யாரைச் சார்ந்தன?
30. காசியில் மரணம்
31. பிராம்மணஜாதி உண்டா?
32. குணத்தினால் குலமா?
33. பிறப்பினால் ஜாதி
34. கலியுகம்
35. ஸ்வப்னமும் ஜாக்கிரமும்
36. பகவானுக்கு உருவம் கற்பித்தல்
37. அரூபமும் ரூபமும்
38. விக்கிரக ஆராதனையின் கிரமம்
39. ஸகுணப்பிரம்ம உபாஸனை
40. அழுக்கால் அழுக்கைப் போக்கல்
41. கட்டுப்பாடுகள்
42. ஆத்மாவின் பாதங்கள்
43. பிராணன் எப்படி அவ்யாக்ருதன்
44. விதை முந்தியதா? முளை முந்தியதா?
45. சாஸ்திரத்தின் பிரயோஜனம்
46. வேதாந்தப் பிரமாணங்களின் பலன்
47. பிரபஞ்சமும் அத்வைதமும்
48. ஜீவனின் சுக துக்கங்கள் பொதுவானவைகளா?
49. ஷட்விதலிங்கங்கள்
50. அர்த்தவாதத்தின் லக்ஷணம்.
51. சாஸ்திரங்கள் பிராமணன் எழுதியவைகளா?
52. பக்தியின் வகைகள்
53. ஐந்து திருஷ்டாந்தங்கள்
54. பக்தியின் முடிவான நிலை
55. மனமும் இந்திரியங்களும்
56. மனோபலம்
57. சரீர பேதங்கள்
58. ஆக்னேய சரீரமும் வாயவீய சரீரமும்
59. பரமாத்மாவின் மாயா ஜனனம்
60. விஸ்வாதிகளும் மாத்திரைகளும்
61. அதிவர்ணாச்ரமியின் இயல்பு.

THE B. N. PRESS, MADRAS.

22770

# ஸ்வயம் ப்ரகாச விஜயம்

ப்ரும்மஸ்ரீ மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்ய
கலாநிதி திராவிட வித்யா பூஷணம்
டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள் அளித்த

## சிறப்புரை

பெரியோர்களுடைய வரலாறுகளும் நல்லுபதேசங்களும் ஒருவரை நல்வழிப் படுத்துமென்பது யாவரும் அறிந்ததே. அவர்கள் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள். சிறந்த அனுபவத்தின் பயனாக அவர்கள் வாக்கிலிருந்து வெளிவரும் ஒவ்வொரு விஷயமும் யாவரும் பின்பற்றிப் பயனடைதற்கு ஏற்றதாகும்.

சேலம் ஜில்லா, நாமக்கல் தாலூகா, சேந்தமங்கலத்தில் ஸ்ரீ தத்தகிரி குஹாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் **ஸ்வயம் ப்ரகாசப் பிரம்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளவர்களைப்பற்றி** என்னுடைய நண்பர்கள் மூலமாகக் கேள்வியுற்றிருக்கிறேன். இக் கலியுகத்தில் இவர்களைப்போன்ற மகான்களைக் காணுதல் மிக அருமை. இவர்களுடைய சரித்திரமும் இவர்களுடைய நல்லுபதேசங்களும் அடங்கிய, **'ஸ்வயம்ப்ரகாச விஜயம்'** என்னும் நூலைப் படித்துப் பார்த்ததில் எனக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையில்லை. மனித வாழ்க்கையின் பயனைப் பெறுவதற்கு இன்றியமையாத பல அரிய விஷயங்கள் இப்புத்தகத்தில் நிரம்பியிருக்கின்றன. ஆஸ்திகர்களுக்கும் சமயப் பற்றுடையவர்களுக்கும் இப்புத்தகம் ஒரு நல் விருந்தாக இருக்குமாதலால், இதனை யாவரும் வாங்கிப் படித்துப்பார்த்து இஷ்டஸித்திகளைப் பெறுவார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்
உ. வே. சாமிநாதையர்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-90

## 1. ஸ்வயம்ப்ரகாச விஜயம்

விலை ரூ. 2 8 0

## 2. சிதம்பர ரகசியம்

விலை ரூ. 0 2 0

## 3. ஸ்ரீரங்க வரலாறு

*ஸ்ரீரங்க வரலாறு, ஸ்ரீரங்க தத்வம், ஸ்ரீ மகா விஷ்ணுவின் மூர்த்தி விசேஷம் முதலிய அரிய பெரிய விஷயங்கள் அடங்கியுள்ள அரிய நூல்.*

விலை ரூ. 0 2 0

இந்த இரண்டில் ஒன்று மூன்றணு ஸ்டாம்பு அனுப்பினுல் ஸ்வாமிகள் படத்துடன் அனுப்பப்படும்.

ஐந்தணு ஸ்டாம்பு அனுப்புபவர்களுக்குச் சிதம்பரரகசியமும், ஸ்ரீரங்க வரலாறும், ஸ்வாமிகள் படமும் அனுப்பப்படும்.

விசாக விஜயம்
26, சுபத்திராள் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை